# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | குடியியற்கல்வி<br>சுட்டெண் : .................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்
    1) சிங்களவர்
    2) முஸ்லீம்
    3) தமிழர்
    4) பறங்கியர்

02. இலங்கையில் வறட்சியினால் அதிகளவு பாதிக்கப்படும் வலயம்
    1) ஈரவலயம்
    2) உலர்வலயம்
    3) மலைநாடு
    4) கரையோரம்

03. ஜனநாயக ரீதியான தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பு
    1) பாரபட்சம் காட்டுதல்.
    2) தொலைநோக்குச் சிந்தனை
    3) சுயநலம்
    4) தன்னிச்சையாக நடத்தல்.

04. "ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு" என்ற மகுடவாசகத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் சேவை
    1) வைத்திய சேவை
    2) கல்விச் சேவை
    3) கூட்டுறவுச் சேவை
    4) போக்குவரத்துச் சேவை

05. சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச அமைப்பு
    1) யுனிசெப்
    2) ஐக்கிய நாடுகள் சபை
    3) யுனெஸ்கோ
    4) உலக சுகாதார அமைப்பு

06. அனர்த்தத்தின் போது தொடர்புகொள்ளும் நிறுவனம்
    1) பாடசாலை
    2) தீயணைப்புப்படை
    3) தொலைத்தொடர்பு நிறுவனம்
    4) மனித உரிமை ஆணைக்குழு

07. புத்தபெருமானின் பிறப்பு, ஞானம் பெறல், பரிநிர்வாணம் அடைதல் என்னும் நிகழ்வுகளை நினைவூட்டும் வகையில் கொண்டாடப்படும் விழா
    1) எசல
    2) பொசன்
    3) வெசாக்
    4) றம்ழான்

08. உலகில் பல்பண்பாட்டுச் சமூகத்தைக் கொண்ட சிறந்த நாடு
    1) ஈரான்
    2) ஈராக்
    3) ஆப்கானிஸ்தான்
    4) ஐக்கிய அமெரிக்கா

09. இலங்கையில் அதிகளவில் ஏற்படும் இயற்கை அனர்த்தம்
    1) சுனாமி
    2) எரிமலை வெடிப்பு
    3) புவிநடுக்கம்
    4) வெள்ளப்பெருக்கு

10. கிறிஸ்தவ மதத்தில் கடவுளின் குழந்தையாக செய்யும் சமய நிகழ்வு
    1) அடக்கம் செய்தல்
    2) திருமணச் சடங்கு
    3) ஞானஸ்தானம் வழங்குதல்.
    4) பரிநிர்வாணம் அடைதல்.

kalvi.lk

11. பொலிஸிற்கு அவசரமான நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் முறையீடு செய்வதற்கு உரிய தொலைபேசி இலக்கம்

1) 110
2) 118
3) 1919
4) 119

12. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அனர்த்தம்

1) காட்டுத் தீ
2) சுனாமி
3) புவி நடுக்கம்
4) நிலச் சரிவு

13. இந்து சமயத்துடன் தொடர்புடைய விழாக்களில் ஒன்று

1) எசல
2) நோன்புப் பெருநாள்
3) பாஸ்கா நிகழ்வு
4) மகா சிவராத்திரி

14. இலங்கைப் போக்குவரத்துச் சபை மாணவர்களுக்கென வழங்கி வருகின்ற போக்குவரத்து சேவையின் பெயர்

1) செமிசெரிய
2) சிசுசரிய
3) கமநெகும
4) திவிநெகும

15. இலங்கையின் உலர்வலயத்தில் சிறுநீரகப் பிரச்சினைக்கான காரணம்

1) கிளைகோசிக் பதார்த்தம்
2) குளுக்கோசின்
3) தயோனின்
4) ஈயம், கந்தகம் நீரில் சேர்தல்.

16. பிள்ளைகளுக்கு அடிப்படை ஜனநாயகப் பண்புகளையும், அனுபவங்களையும் வழங்கும் முதன்மையான நிறுவனம்

1) குடும்பம்
2) கோவில்
3) சனசமூக நிலையம்
4) மருத்துவமனை

17. இலங்கை பொலிஸ் இலச்சினையில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகம் எது?

1) சிங்கம்
2) புலி
3) யானை
4) கரடி

18. சிறுவர் உரிமைகளில் ஒன்று

1) ஆசிரியருக்கு மதிப்பளித்தல்.
2) விழாக்களில் பங்கு பெறல்.
3) கல்வி பெறல்.
4) பெற்றோரைப் பராமரித்தல்.

19. தற்காலத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படுவது

1) தந்தி
2) இணையம்
3) கடிதம்
4) டெலி Mail

20. பிரித்தானியர் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட சேவை

1) கல்விச் சேவை
2) சுகாதார சேவை
3) தந்திச் சேவை
4) கூட்டுறவுச் சேவை

($20 \times 2 = 40$ புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினாவிற்கும், ஏனைய நான்கு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1) குடியியற்கல்விப் பாடத்தில் இரண்டாம் தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை எது? (02 புள்ளிகள்)

2) கணிப்பீட்டிற்காக நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3) கணிப்பீடு செய்வதற்கு தகவல் பெற்றுக் கொண்ட வழிமுறைகள் மூன்று எழுதுக. (03 புள்ளிகள்)

4) கணிப்பீட்டினை மேற்கொண்டதால் பெற்றுக் கொண்ட பயன்கள் நான்கு குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**02.** 1) பொதுச் சேவை என்றால் என்ன? (02 புள்ளிகள்)

2) பொதுச் சேவையின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

3) இலங்கையில் சுகாதாரச் சேவையின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டு எழுதுக. (04 புள்ளிகள்)

4) உமக்குத் தெரிந்த தொற்றாநோய்கள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**03.** 1) அரசாங்கத்தினால் மட்டும் வழங்கப்படும் பொதுச் சேவைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2) சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

3) கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

4) மின்சார சேவையைப் பயன்படுத்தும் பிரஜைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**04.** 1) இலங்கையில் வாழும் இரண்டு இன மக்களைத் தருக. (02 புள்ளிகள்)

2) இந்து சமயத்தோடு தொடர்புடைய கலாசார நிகழ்வுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

3) பல்பண்பாட்டு சமூகத்தின் பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

3) பல்பண்பாடு கொண்ட நாடாக பரிணமிப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவினால் பின்பற்றப் படும் செயற்பாடுகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)


kalvi.lk

**05.** *1)* இயற்கை அனர்த்தங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

*2)* மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் நான்கைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

*3)* அனர்த்தங்களின் போது உதவி செய்யும் நிறுவனங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

*4)* இயற்கை அனர்த்தங்களால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கான (குறைப்பதற்கான) வழிமுறைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**06.** *1)* குடும்பத்தில் காணப்படும் சனநாயகப் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

*2)* சிறுவர் உரிமைகள் இரண்டு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

*3)* மனவெழுச்சிகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

*4)* தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**07.** *1)* சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

*2)* சுனாமியினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

*3)* மருந்துப் பொருட்களின் பாவனையின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

*4)* வீதி விபத்துக்களை தவிர்ப்பதில் சாரதிகளுக்குள்ள பொறுப்புக்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457